ந.க.எண். 20643/ ஜி3 / 2024

/மின்னஞ்சல்/

**மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 06.**

**ந.க.எண். 20643/ ஜி3 / 2024,** **நாள் 24 .10.2024**

பொருள் : தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் – தேசிய மக்கள்தொகை கல்வித் திட்டம் – வளரிளம் பருவக் கல்வி தொடர்பான **பங்கேற்று நடித்தல் (Roleplay)** போட்டியினை நடத்துதல் –சார்பாக.

பார்வை : 2024 –25 ஆண்டிற்கான மக்கள் தொகை கல்வித் திட்ட ஆண்டுத் திட்டம்.

... ... ...

பார்வையில் காணும் புதுடெல்லி, தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் கடித வழிகாட்டுதல் மற்றும் நிதியுதவியுடன், 2024–25 கல்வியாண்டில், வளரிளம் பருவக் கல்வி சார்ந்த **பங்கேற்று நடித்தல் (Roleplay)** போட்டியினை அனைத்து மாவட்டங்களிலும் உள்ள, பள்ளி வாரியாக, அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும், பள்ளி அளவில் 9 ஆம் வகுப்பு மாணவ மாணவியருக்கு, அளிக்கப்பட்டுள்ள தலைப்பு மற்றும் நிபந்தனைகளின்படி நடத்திடவும், அதில் முதலிடம் பெறும் பள்ளி மாணவர் குழு மாவட்ட அளவிலும், அதில் முதலிடம் பெறும் பள்ளி மாணவர் குழு மாநில அளவிலும், மாநில அளவில் முதலிடம் பெறும் பள்ளி மாணவர் குழுவிற்கு ஆங்கிலத்தில் பங்கேற்று நடித்தல் செயல்பாடுகளுக்கான பயிற்சி அளிக்கப்பட்டு, அக்குழு NCERT–ல் நடைபெறவுள்ள தேசிய அளவிலான போட்டியில் பங்கேற்று நடத்திட வேண்டும் என சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்/ மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

**பங்கேற்று நடித்தல் போட்டி கீழ்க்காணும் ஐந்து தலைப்புகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட சூழ்நிலைகளில் நடத்திடல் வேண்டும்.**

1. **ஆரோக்கியமாக வளர்தல்**
2. **சத்தான உணவு மற்றும் உடல்நலம்**
3. **தற்பாதுகாப்பு (உடல், மனம் ,மனஎழுச்சி மற்றும் பாலியல்)**
4. **இணையம், மின்னியக் கருவிகள் மற்றும் ஊடகங்களை பாதுகாப்பாகப் பயன்படுத்துதல்**
5. **போதைப் பழக்கத்தின் காரணமும் தடுப்பும்**

**பள்ளிகள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்**

- பங்கேற்று நடித்தல் போட்டி அரசுப் பள்ளிகளில் 9 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு மட்டும் நடத்தப்பட வேண்டும்.
- இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள சூழ்நிலைகளில் ஏதேனும் ஒன்றைத் தெரிவு செய்து, தலைமை ஆசிரியரால் நியமிக்கப்பட்ட ஆசிரியரின் உதவியுடன் உரையாடல்களை தயார் செய்து, மாணவர்கள் பயிற்சி பெற வேண்டும்.
- சூழ்நிலையில் கொடுக்கப்பட்டுள்ள பாத்திரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவோ, குறைக்கவோ கூடாது.
- இப்போட்டியில் கலந்து கொள்ளும் மாணவ மாணவிகள் சிறப்பு உடைகள் அல்லது அலங்காரம் ஆகியவற்றை கண்டிப்பாக தவிர்த்து, தங்கள் பள்ளிச் சீருடையிலேயே பங்கேற்று நடிக்க வேண்டும். பங்கேற்று நடித்தலின்போது மாணவர்கள் எந்தப் பொருளையும் பயன்படுத்தக் கூடாது.
- பள்ளிகள் பங்கேற்று நடித்தல் போட்டியை அந்தந்தப் பள்ளிகளில் நடத்தி மிகச் சிறந்த ஓர் அணியினை மாவட்ட அளவில் நடைபெறும் போட்டியில் கலந்து கொள்ள ஆசிரியரின் துணையுடன் தலைமை ஆசிரியர் அனுப்பி வைக்க வேண்டும். **அதே போன்று ஒன்று அல்லது அதற்கு மேலும் ஒரு ஆசிரியர்** துணையுடன் **பாதுகாப்புடன்** மாநில அளவிலான பங்கேற்று நடித்தல் போட்டியில் சார்ந்த மாணாக்கர்கள் கலந்து கொள்ள வேண்டும்.

- மாநில அளவிலான போட்டி **நடத்திடும்** மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனத்தால் வெளியூரிலிருந்து **மாநில அளவிலான போட்டியில் பங்கேற்க** வருகை புரியும் **மாணாக்கர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு தங்கும் வசதி (Refresh)** ஏற்பாடுகள் செய்யப்பட்ட **வேண்டும்.**
- மாவட்ட அளவிலான போட்டிகளில் கலந்து கொள்வதற்காக பயணப்படி வழங்கப்படமாட்டாது.
- மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ளும் ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகளுக்கு இரயிலில் இரண்டாம் வகுப்பு படுக்கை வசதி / தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கட்டணம் மாநில அளவிலான போட்டி நடைபெறும் மையத்தில் வழங்கப்படும்.

**மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்**

- மாவட்ட / மாநில அளவிலான போட்டியை நடத்த செயல்முறைகளில் தெரிவித்துள்ளவாறு நடுவர்களை நியமித்து, மாவட்டஅளவிலான முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களை சார்ந்த முதல்வர் தெரிவு செய்ய வேண்டும்.
- முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களை பெறும் மாணவர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் கொடுக்கப்பட்டுள்ள தொகைக்கானப் புத்தகங்களாக மட்டுமே வழங்க வேண்டும். மேலும், நடுவர்கள் மதிப்பூதியம் ஆகியன மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் அனுப்பப்பட உள்ள மக்கள் தொகைக் கல்வித்திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும்.
- மாவட்ட அளவில் முதலிடம் பெறும் அணியின் பெயர்களை, மாநில அளவில் நடத்திடும் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு மின்னஞ்சல் மூலம் மாநில அளவிலான போட்டி நடைபெறும் நாளுக்கு முன்னர் அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்களும் அனுப்பி வைக்க வேண்டும்.
- போட்டியில் பங்கேற்ற பள்ளிகள்/பங்கேற்பாளர்கள்/பார்வையாளர்களின் எண்ணிக்கை மற்றும் தெரிவு செய்யப்பட்ட தலைப்புகள் ஆகியவற்றை, இந்நிறுவனத்திலிருந்து அனுப்பப்பட உள்ள Google Link–ல் நிரப்ப வேண்டும்.

இப்போட்டி மாணவர்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கில் நடத்தப்படுவதால் சார்ந்த அரசுப்பள்ளித் தலைமையாசிரியர்கள் இப்போட்டிக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் செயல்படும் வகையில், அவர்களை ஊக்குவிக்குமாறும், இச்செயல்முறைகள் வழிகாட்டுதலை, அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மேலும், இப்போட்டியை சிறப்பாக நடத்திமுடித்த உடன், இப்போட்டிக்கான செலவீன அசல் இரசீதுகளை தணிக்கைக்கு சமர்ப்பிக்கம் பொருட்டு பராமரிக்கவும், இச் செலவின முழு விவரம் (UC) மற்றும் மீதமுள்ள தொகையினை சென்னை–6, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் இயக்குருக்கு அனுப்பி வைக்குமாறு சார்ந்த மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவன முதல்வர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இணைப்பு : **பங்கேற்று நடித்தல் (Roleplay)** போட்டி நடத்திட கடைபிடிக்கப்பட வேண்டிய வழிமுறைகள் விவரங்கள் (1)

**இயக்குநர்**

**பெறுநர்**

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் / அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள்.

**நகல்**

1) இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை–6 – அவர்களுக்கு மேல்நடவடிக்கைக்காகக் கனிவுடன் அனுப்பப்படுகிறது.

2) அரசுச் செயலர், பள்ளிக் கல்வித் துறை, தலைமைச் செயலகம், சென்னை–09, அவர்களுக்கு தகவலுக்காக பணிவுடன் அனுப்பப்படுகிறது.

## பங்கேற்று நடித்தல்)Roleplay( போட்டி நடத்திட கடைபிடிக்கப்பட வேண்டிய வழிமுறைகள் விவரங்கள்

1. **பங்கேற்று நடித்தல் (Roleplay)க்கான நேரம்** – 5 –6 நிமிடங்கள் மட்டும்
2. **போட்டிகளுக்கான கால அட்டவணை**

| போட்டிகள் | இடம் | நாள் |
|---|---|---|
| பள்ளி அளவு | அந்தந்தப் பள்ளிகள் | 12.11.2024–க்குள் |
| மாவட்ட அளவு | அந்தந்த மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் அல்லது ஏதேனும் ஓர் அரசுப் பள்ளி | 22.11.2024–க்குள் |
| மாநில அளவு | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், திருச்சிராப்பள்ளி தெரிவு செய்யும் ஒரு மையம். | 27.11.2024 |
| தேசிய அளவு | NCERT, புதுடெல்லி | சனவரி– 2025 |

3. **போட்டிகளை மதிப்பீடு செய்யும் நடுவர்கள் நியமனம்**

| போட்டிகள் | நடுவர்கள் |
|---|---|
| பள்ளி அளவு | அந்தந்தப் பள்ளித் தலைமையாசிரியர், இரண்டு ஆசிரியர்கள் (தலைமை ஆசிரியரின் பரிந்துரையின் படி) |
| மாவட்ட அளவு | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர், வளரிளம் பருவக் கல்வியில் அனுபவம் உள்ள போட்டியில் பங்குபெறாத ஒரு பள்ளியின் தலைமை ஆசிரியர், நிகழ்த்துக் கலைகளில் அனுபவம் மிக்கவர் ஒருவர் |
| மாநில அளவு | வளரிளம் பருவக் கல்வி வல்லுநர், கல்வியாளர், நிகழ்த்துக் கலைகளில் அனுபவம் மிக்கவர் |

4. **பங்கேற்று நடித்தல் )Roleplay( போட்டியின் உட்கூறுகளின் மதிப்பெண் பங்கீடு**

| வ. எண். | உட்கூறுகள் | மதிப்பெண் |
|---|---|---|
| 1 | சூழ்நிலையைச் சரியாகப் பயன்படுத்துதல் | 25 |
| 2 | பங்கேற்று நடித்தல் | 25 |
| 3 | பங்கேற்று நடித்தலின்போது வாழ்வியல் திறன்களின் வெளிப்பாடு | 30 |
| 4 | பார்வையாளர்கள் கேட்கும் வினாக்களுக்கு சரியாக பதில் அளித்தல் | 10 |
| 5 | குழுவினர் பங்கேற்று நடித்தல் கருத்தை தொகுத்து வழங்குதல் | 10 |
| | மொத்தம் | 100 |

**மாவட்ட அளவிலான பங்கேற்று நடித்தல் (Roleplay) போட்டிக்கான செலவின விவரம்**

| விவரம் | கூறுகள் |
|---|---|
| மாவட்ட அளவிலான பரிசுத் தொகை (புத்தகங்கள்) | முதல் பரிசு ரூ. 300/– x 5 (குழு) = ரூ.1500/–<br>இரண்டாம் பரிசு ரூ. 200 /– x 5 (குழு) = ரூ.1000/–<br>மூன்றாம் பரிசு ரூ. 150/– x 5 (குழு) = ரூ.750/– |
| மாவட்ட அளவிலான நடுவர்கள் மதிப்பூதியம் | ரூ. 500 x 3 (நபர்கள்) = ரூ.1500/– |
| நடுவர்கள் சிற்றுண்டி | 100 x 1= ரூ.100/– |

5. மாநில அளவிலான பங்கேற்று நடித்தல் )Roleplay( போட்டிக்கான செலவின விவரம்

| விவரம் | கூறுகள் | மொத்தம் |
|---|---|---|
| நடுவர்கள் மதிப்பூதியம் மற்றும் பயணப்படி | ரூ. 1000 x 3(நபர்கள்) | ரூ.3000/- |
| மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான காலை உணவு, சிற்றுண்டி மற்றும் மதிய உணவு | ரூ. 300 x 240(நபர்கள்) | ரூ.72,000/- |
| ஆசிரியர்களுக்கான பயணப்படி மற்றும் தினப்படி | ரூ. 1000 x 38 (நபர்கள்) | ரூ.38,000/- |
| மாணவர்களுக்கான பயணப்படி | ரூ.600 x 190 (5 குழு) | ரூ.1,14.000/- |
| மாநில ஒருங்கிணைப்பாளருக்கான பயணப்படி, தினப்படி மற்றும் தங்கும் இடவசதி | ரூ. 5500 x 1 (நபர்) | ரூ.5500/- |
| மாணவர்களுக்கான பரிசுத்தொகை மதிப்பு | ரூ.5000/- | ரூ.5000/- |
| சில்லறை செலவினம் | ரூ.5200/- | ரூ.5200/. |
| | மொத்தம் | ரூ.2,42,700/- |

**தலைப்பு : 1 ஆரோக்கியமாக வளர்தல்**

**சூழ்நிலை : 1.1** பூஜா, சுஜாதா, ராபியா மற்றும் எஸ்தர் நல்ல நண்பர்கள். அனைவரும் 13 வயதானவர்கள். அவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தங்களின் நேரத்தை செலவிடுகின்றனர். அவர்கள் புதியத் திரைப்படம், புதிய உடைகள், வீட்டுப்பாடம், வகுப்பிலுள்ள மாணவர்கள் என பலவற்றைப் பற்றியும் தங்களிடையே பேசுகின்றனர். நேற்று, எஸ்தர் தர்மசங்கடமாக உணர்ந்தாள். அவளுக்கு மாதவிடாய் ஏற்பட்டதால், தனது சீருடையில் கறை ஏற்பட்டுவிடும் என்று கவலைப்பட்டாள். கடந்த மாதம் சுஜாதா பூப்பெய்தியதால், அவள் வீட்டில் அதனை சிறப்பான விழாவாகக் கொண்டாடினார்கள். மூன்று மாதங்களுக்கு முன்னர் ராபியாவிற்குப் பள்ளியில் மாதவிடாய் ஏற்பட்டதால், அவள் வேறொரு வகுப்பில் பயிலும் தனது மாமா மகளிடமிருந்து சானிடரி நாப்கினை கேட்டு வாங்கியதை, பூஜா நினைவு கூர்ந்தாள். பூஜாவைத் தவிர அவளின் மற்ற நண்பர்களுக்கு மாதவிடாய் தொடங்கியுள்ளது. அவளுக்கு ஏதேனும் பிரச்சனை உள்ளதா ? பூஜா ஒரு பெண் ஆசிரியரை அணுகி இதுபற்றிக் கேட்டாள். அந்த பெண் ஆசிரியர் அவளிடம் இதில் ஒரு பிரச்சனையும் இல்லையென்றும், இது பருவமடைதலுடன் தொடர்புடையது என்றும் கூறினார். மேலும், அவர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வயதில் பூப்பெய்துவார்கள் மற்றும் இது இயற்கையானதே என்றுக் கூறினார்.

பங்கேற்று நடித்தல்: இதன் பாத்திரங்கள்

எஸ்தர்: அவளுக்கு மாதவிடாய் ஏற்பட்டதால், தனது பள்ளிச் சீருடையில் கறை ஏற்பட்டுவிடும் என்று கவலைப்பட்டாள்.

சுஜாதா: அவள் பூப்பெய்தியதால், அவள் குடும்பத்தினர், அதனை ஒரு விழாவாகக் கொண்டாடினார்கள்.

ராபியா: அவளுக்குப் பள்ளியில் மாதவிடாய் ஏற்பட்டதால், அவள் வேறொரு வகுப்பில் பயிலும் தனது மாமா மகளிடமிருந்து ஒரு சானிடரி நாப்கினைக் கேட்டு வாங்கினாள்.

பூஜா: தனது அனைத்து நண்பர்களுக்கும் மாதவிடாய் ஏற்பட்டதால், தனக்கு ஏதேனும் பிரச்சனை உள்ளதோ என்று நினைத்து பூஜா தனது ஆசிரியரிடம் ஆலோசனை கேட்டாள்.

ஆசிரியர்: ஆசிரியர் பூஜாவிடம், ஒவ்வொருவரும் ஒவ்வொரு வயதில் பூப்பெய்துவார்கள். இது இயற்கையானதே. இது ஒவ்வொரு பெண் குழந்தைக்கும் இயற்கையாக நிகழும் பருவமடைதலுடன் தொடர்புடையது என்று கூறி, அவளுக்கு மனஅமைதி ஏற்படுமாறு எடுத்துக் கூறினார். இதுபற்றிக் கவலை கொள்ளத் தேவையில்லை. தேவைப்படின், ஒரு பெண் மருத்துவரை அணுகி மருத்துவப் பரிசோதனை செய்து கொள்ளுமாறு, ஆசிரியர் பூஜாவிடம் கூறினார்.

**தலைப்பு : 2 . சத்தான உணவு மற்றும் உடல்நலம்.**

**சூழ்நிலை : 2.1** ஒன்பதாம் வகுப்பில் 3 நண்பர்கள் உள்ளனர்.இவர்களில் ஒருவர் எப்போதும் படித்துக்கொண்டிருப்பார்.ஆனால் விளையாட்டில் ஈடுபடமாட்டார்.ஆனால், மற்ற ஒரு நண்பர் படிப்பு, விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி ஆகியவற்றில் நேரத்தைச் செலவிடுகிறான். மூன்றாம் நண்பர் கவனமில்லாமல், பெரும்பாலான நேரத்தைக் கணினி, கைபேசி, மற்றும் வீடியோ விளையாட்டுகளில் செலவிட்டு, எந்த வகுப்பறைச் செயல்பாடுகளிலும் அல்லது பிற செயல்களிலும் ஈடுபடமாட்டார். ஒருநாள் பள்ளிக்குப் பார்வையிட வந்த கல்வி அலுவலர் மாணவர்களிடையே ஊட்டச்சத்து மிக்க உணவை உட்கொள்வதன் முக்கியத்துவத்தைப் பற்றிப் பேசினார்.ஆசிரியரும், மாணவர்கள் உடல்நலமிக்க வாழ்க்கை முறையைக் கடைப்பிடிக்க ஊக்குவிக்கத் தொடங்கினார்.பின்னர், அவர்கள் தங்களின் பின்னடைவைப் புரிந்துகொண்டு, மறுநாள் முதல் அவர்கள் இருவரும் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி ஆகியவற்றில் ஈடுபட்டு, சத்தான உணவை உட்கொள்ளத் தொடங்கினார்.

**பங்கேற்று நடித்தல் : இதன் பாத்திரங்கள்**

**முதல் மாணவன்:** எல்லா நேரமும் புத்தகங்களைப் படித்துக்கொண்டு உணவை நேரத்தில் உண்ணாமல், விளையாட்டு மற்றும் உடற்பயிற்சியில் ஈடுபடாமல் உள்ளான்.

**இரண்டாம் மாணவன்:** கவனக்குறைவானவன். பாடங்களில் ஈடுபாடு இல்லாமல் துரித உணவை அதிகம் விரும்பி உண்டு, கணிணி அல்லது கைபேசியில் பெரும்பாலான நேரம் விளையாடுபவன்

**மூன்றாம் மாணவன்:** சத்தான சரிவிகித உணவை உண்பவன். கல்வியில் சிறந்து விளங்குவது மட்டுமல்லாமல் அனைத்துப் பாட இணைச்செயல்பாடுகளிலும் ஈடுபடுபவன்.

**கல்வி அலுவலர்:** மன அழுத்தம் இல்லாமல் தேர்வினை எதிர்கொள்ளுதல் மற்றும் முழுமையான வளர்ச்சிக்கு உணவு, விளையாட்டு, உடற்பயிற்சி ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றி மாணவர்களிடம் கலந்துரையாடுகிறார்.

**ஆசிரியர்:** சரிவிகித உணவின் முக்கியத்துவத்தைப்பற்றி கலந்துரையாடி மாணவர்களைப் பாடஇணைச்செயல்பாடுகளில் பங்கேற்க ஊக்குவிக்கிறார். மாணவர்களின் நடத்தையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை ஆசிரியர் உற்றுநோக்குகிறார்.

**சூழ்நிலை 2 . 2** ஒன்பதாம் வகுப்பு படிக்கும் ஒரு மாணவன் தனது தாயார் மற்றும் பாட்டியிடம் "ஏன் தினமும் வீட்டில் தயாரிக்கப்பட்ட உணவையே அளிக்கிறீர்கள்!அவை பிட்சா மற்றும் பர்கர் போல சுவையாக இல்லை" என்று குறைகூறுகிறார்.அவன் தனது பாட்டியிடம் தனது நண்பர்களின் ஒருவன் மதிய உணவினை வீட்டிலிருந்து எடுத்துவராமல், தினமும், பிட்சா, பர்கர், போன்றவற்றையே உட்கொள்கிறான் என்று கூறினான்.அதற்கு அவன் பாட்டி, "நான் காலையில் விரைவில் எழுந்து, வீட்டில் தயாரிக்கப்பட்ட எளிய, ஆரோக்கியமான உணவை உண்டதால், 70 வயதிலும் திடமாக உள்ளேன்" என்று கூறினார். இந்தத் துரித உணவுகள் சுவையானவையாக இருக்கலாம்; ஆனால், அவை உடல்நலனுக்கு நல்லதல்ல என்றும் கூறினார். ஒருநாள் மருத்துவப் பரிசோதனைக்காக, மருத்துவர் ஒருவர் பள்ளிக்கு வருகிறார். பல துரித உணவை உட்கொள்ளும் மாணவர்கள் வெளிர் நிறத்திலும், சுறுசுறுப்பு இல்லாமலும், இரத்தச் சோகையுடனும், பார்வைக்குறைபாட்டுடனும் இருப்பதைக் கண்டறிந்தார்.அந்த மருத்துவர் மாணவர்களிடம், எளிய உடல் நலத்திற்குத் தீங்கு விளைவிக்காத உணவை உட்கொள்ளுமாறும், துரித உணவுகளான பிட்சா, பர்கர், போன்றவற்றைத் தவிர்க்குமாறும் கூறி, நல்ல உடல் நலனுக்காக தினமும் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சிசெய்வதன் முக்கியத்துவத்தையும் எடுத்துக்கூறுகிறார். அந்த மாணவன் தனது தாயாரும், பாட்டியும் சரியாகவே கூறியுள்ளனர் என்பதைப் புரிந்துகொண்டான்.அவர்கள் அனைவரும் உடல்நலத்திற்கு தீங்கு விளைவிக்காத உணவை உட்கொண்டு, உடற்பயிற்சி மற்றும் விளையாட்டில் ஈடுபடுவதாக உறுதி மேற்கொண்டனர்.

**பங்கேற்று நடித்தல் இதன் பாத்திரங்கள்**

**முதல் மாணவன்:** தாயார் கொடுக்கும் உணவைக் குறை கூறுகிறான்.

**பாட்டி:** திடமாக இருப்பவர் எளிய மற்றும் உடல்நலமிக்க உணவை உட்கொள்பவர், தனது பேரனுடன் தனது கருத்துகளையும் எண்ணங்களையும் பகிர்ந்து கொள்கிறார்.

**இரண்டாம் மாணவன்:** வெளிரிய, சோம்பலான, துரித உணவை உட்கொள்ளும் பழக்கம் உடையவன்.

**மருத்துவர்:** மாணவர்களின் உடல்நலம் மற்றும் ஆரோக்கியத்தைப் பரிசோதித்து, விளையாட்டு , உடற்பயிற்சி மற்றும் ஆரோக்கியமான உணவின் முக்கியத்துவத்தை மாணவர்களிடையே எடுத்துக்கூறி ஊக்கப்படுத்துகிறார்.

**தாயார்:** உடல்நலமிக்க மதிய உணவைத் தயார் செய்கிறார்.

**சூழ்நிலை: 2.3:** 9 ஆம் வகுப்பில் படிக்கும் ஒரு மாணவன், மின்னியக் கருவிகளை அதிகமாகப் பயன்படுத்தும்வரை நன்றாகப் படித்துக் கொண்டிருந்தான். அவன் நண்பர்களில் ஒருவன், அவனை மின்னிய விளையாட்டுகளை விளையாட ஊக்குவித்தான். இவற்றில் அதிகமாக ஈடுபட்டிருந்ததால், கல்விநிலை குறைவதுடன், அவனின் உடல்எடையும் அதிகரித்து வந்தது.அவன் விளையாட்டில் அதிகநேரம் செலவிடுவதால், அவனின் உடல்நலமும் கல்வியும் பாதிப்படைவதால், அவனின் தாயார் கவலையுடன் உள்ளார்.அவர் தனது கவலையை ஆசிரியர்களுடன் பகிர்ந்துகொள்கிறார். ஆசிரியர்கள், மாணவர்களுக்காக வகுப்பறையில் ஸ்மார்ட்போன்/மின்னியல் கருவிகள்/கணினி ஆகியவற்றை எவ்வாறு உடல்நலம் பாதிக்கா வண்ணம், நடுநிலையோடு பயன்படுத்தலாம் என்பது குறித்த கலந்துரையாடல் அமர்வு ஒன்றை நடத்தினார்கள். தனது கல்வியும் உடல்நலமும் இந்த மின்னிய விளையாட்டுகளால் எவ்வாறு பாதிப்படைந்துள்ளன என்பதை அந்த மாணவன் புரிந்து கொள்கிறான்.தன்னைக் கால்பந்து விளையாட்டு விளையாட எப்போதும் அழைக்கும் நண்பன் ஒருவனிடம் செல்கிறான்.

**பங்கேற்று நடித்தல் இதன் பாத்திரங்கள்**

**முதல் மாணவன்:** இவன் 8–10 மணிநேரம் ஸ்மார்ட்போன்/டேப்லட்/கணினியில் விளையாடுகிறான்.

**இரண்டு நண்பர்கள்:** பள்ளிக்குச் செல்லாமல் விளையாடுமாறு அவனைத் தூண்டுகின்றனர்.

**தாயார்:** தனது மகனின் உடல்நலம் குறித்து வருத்தத்துடன், தன்னால் எதுவும் செய்யமுடியவில்லையே என்று கவலைப்படுகிறார். தனது மகன் படிப்பு மற்றும் உடலியக்கச் செயல்பாடுகளில் ஈடுபடவேண்டும் என்று விரும்புகிறார்.

**ஆசிரியர்:** மாணவர்கள் உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் நலத்துடன் இருப்பதற்காக ஆதரவுடன் இருந்து அவர்களை ஊக்கப்படுத்துகிறார்.

**நண்பன்:** தனது நண்பனைக் கால்பந்து விளையாட்டு விளையாடவும், நேர்மறை நடத்தைத் திறன்களைப் பெறவும் ஊக்குவிக்கிறான்.

**தலைப்பு : 3. தற்பாதுகாப்பு (உடல், மனம், மன எழுச்சி சார்ந்து) மற்றும் தவறான பயன்பாடு.**

**சூழ்நிலை 3 .1** ஒன்பதாம் வகுப்பு படிக்கும் ஒரு குழந்தைக்கு படிப்பில் உதவி தேவைப்படுகிறது. அக்குழந்தை காலாண்டுத் தேர்வில் குறைந்த மதிப்பெண்களைப் பெற்றுள்ளது. எனவே, அக்குழந்தையின் தாயார், அதன் உறவுக்கார பையனை உதவி செய்யுமாறு கேட்கிறார்.அவன் தனது உறவினருக்கு உதவுவதாகக் கூறுகிறான். பாடம் கற்பிக்கும் போது, அக்குழந்தை விரும்பாதவகையில் அவன் அக்குழந்தையை தொடமுயற்சி செய்ததுடன், இதனை யாரிடமும் தெரிவிக்க வேண்டாமென்று கூறுகிறான். அக்குழந்தை அமைதியாக, யாரிடமும் பேசாமல் இருப்பதால், அக்குழந்தையின் தாயார் கவலைப்படுகிறார். பள்ளியிலும் அக்குழந்தை யாரிடமும் பேசாமல் இருக்கிறது. அக்குழந்தையின் உயிர் நண்பன் அதன் நடத்தையில் ஏற்பட்டுள்ள மாற்றம் பற்றி கேட்டபோது, உறவினரின் செயலைப்பற்றித் தெரிவிக்கிறது. முதலில் தயங்கினாலும், பின்னர் ஆசிரியரின் உதவியைக்கேட்க அக்குழந்தை ஒப்புக்கொள்கிறது. ஆசிரியர் அக்குழந்தையின் தாயாரிடம் இந்தச் சூழ்நிலையை எவ்வாறு கவனமாகக் கையாள வேண்டும் என்பது பற்றிக் கலந்துரையாடுகிறார். அக்குழந்தைக்குப் பாடங்களைக் கற்க உதவிசெய்ய வேறொரு மாணவனை நியமிக்கிறார்.

**பங்கேற்று நடித்தல் இதன் பாத்திரங்கள்**

**குழந்தை:** ஒன்பதாம் வகுப்பில் படிக்கும் அக்குழந்தைக்கு கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களில் உதவி தேவைப்படுகிறது. தனது உறவுக்கார பையனிடமிருந்து உதவியைப் பெறுகிறது.

**உறவுக்கார பையன் :** தனது உறவினரை முறையற்ற விதத்தில் தொடுவதுடன், அது யாருக்கும் தெரிந்து விடக்கூடாது என்று நினைக்கிறான்.

**தாயார்:** தனது குழந்தையை விரும்புபவர், யாரிடமும் பேசாமல் அமைதியாக இருக்கும் தனது குழந்தை குறைந்து கவலை கொள்பவர்

**நண்பன்:** நல்ல நண்பன். தனது நண்பனைப் பற்றிக் கவலைப்படுவதுடன், ஆசிரியரின் உதவியை நாடுமாறு ஊக்குவிக்கிறான்

**ஆசிரியர்:** மாணவர்களிடம் இணக்கமானவர். அந்த மாணவரின் தாயாரிடம் இப்பிரச்சனை குறித்துப் பேசுவதுடன், அக்குழந்தையின் வாழ்வியல் திறன்களை வளர்க்கும் வகையில் உதவி செய்கிறார்.

**சூழ்நிலை 3.2** மூன்று நண்பர்கள் பதினொன்றாம் வகுப்பில் படிக்கின்றனர். அவர்களில் ஒருவன் 10-ஆம் வகுப்பில் பயிலும் ஒரு மாணவியின் வீட்டிற்கு அருகில் வசித்து வருகிறான். இவர்கள் இருவரும் நண்பர்களாவர். மற்ற இரு மாணவர்கள், அந்த மாணவி பள்ளி முடிந்து வீடு திரும்பும் போது, அவளை வழிமறித்து கிண்டல் செய்கின்றனர். இதனால், அவள் மிகவும் வருத்தமடைகிறார். தனது தோழியிடம் இந்த பிரச்சினையை எடுத்துக் கூறுகிறாள். தனது தோழியின் வீட்டிற்கு அருகில் வசிக்கும், அவர்களின் நண்பனிடம் இந்த பிரச்சினையை எடுத்துக் கூறும்படி அறிவுறுத்துகிறாள். அவன் அந்த மாணவர்களிடம் இவ்வாறு நடந்து கொள்வதால் அவர்களுக்கும், அந்த மாணவிகளுக்கும் ஏற்படும் விளைவுகள் குறித்து கலந்துரையாடுகிறான். அந்த மாணவர்கள் தங்களின் தவறை உணர்ந்து அனைவரும் நல்ல நண்பர்களாக பழகத் தொடங்கினர்.

**1. முதல் மாணவன்:** இவன் பதினொன்றாம் வகுப்பு பயிலும் நல்ல நடத்தையுடைய மாணவன். இவனின் வீட்டிற்கு அருகில் ஒரு மாணவி வசித்து வருகிறாள். இவள் தனது பிரச்சினையை இவனுடன் விவாதிக்கிறாள். இவள் மாணவர்களின் தவறான நடத்தையின் விளைவுகளை அவர்களுடன் கலந்துரையாடுகிறாள்.

**2.3. இரண்டு மாணவர்கள்:** இவர்கள் முதல் மாணவனின் நண்பர்கள். இவர்கள் தினமும், ஒரு மாணவியை கிண்டல் செய்கின்றனர்.

**4. முதல் மாணவி:** பத்தாம் வகுப்பு பயிலும் இவள், இரண்டு மாணவர்கள் கிண்டல் செய்வதால், மிகவும் வருத்தமடைகிறாள்.

**5. இரண்டாம் மாணவி:** இவள் முதல் மாணவியின் தோழியாவாள். இவள் தனது தோழியிடம், அந்த மாணவனை சந்தித்து, அவனின் நண்பர்களின் நடத்தையைப் பற்றியும், அவர்கள் செய்யும் கிண்டலை நிறுத்தும்படிக் கூறுமாறும் வலியுறுத்திக் கூறுகிறாள்.

**தலைப்பு 4 : இணையம், மின்னியக்கருவிகள் மற்றும் ஊடகங்களைப் பாதுகாப்பாகப் பயன்படுத்துதல்**

**சூழ்நிலை: 4.1**

மூன்று நண்பர்கள் ஒரே பள்ளியில் 9ஆம் வகுப்பில் படிக்கிறார்கள்.அவர்களில் ஒரு மாணவன், அவன் வகுப்பில் படிக்கும் ஒரு மாணவியின் பிறந்தநாள் அன்று அவளை ஆச்சரியப்படவைப்பதற்காக, அவளின் புகைப்படங்களை முகநூலிலிருந்து பதிவிறக்கம் செய்து, ஒரு கூட்டுப்புகைப்படத்தை (collage) உருவாக்க அவன் முடிவு செய்கிறான்.ஒரு கூட்டுப் புகைப்படத்தை உருவாக்கி தனது நண்பர்களில் ஒருவரிடம் காண்பிக்கிறான். அதனைப் பார்த்து அதிர்ச்சியடைந்து, இச்செயல் 'சைபர்குற்றம்' என்றும், இதனால் அவனுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்க முடியும் என்றும் அவன் விளக்குகிறான் அவன் அதனை நம்பாமல், விளையாட்டாகக் கூறுவதாக நினைக்கிறான். அவனும் அவனின் இன்னொரு நண்பனும் சேர்ந்து அந்தக் கூட்டுப் புகைப்படத்தை அந்த மாணவியிடம் அளிக்கின்றனர்.ஆசிரியர் வகுப்பில் சைபர் குற்றம் பற்றி நடத்திய பயிற்சியில் அவள் பங்கேற்றதால், அவளுக்கு சைபர்குற்றம் பற்றித்தெரியும்.இச்செயலை அவள் விரும்பவில்லை.ஆனால் அமைதியாக இருந்து, இச்செயலின், விளைவுகளை அவர்களிடம் விளக்குகிறான்.அந்த மாணவன் அதைப் புரிந்துகொண்டு பிற்காலத்தில் இதுபோன்ற செயலில் ஈடுபடுவதில்லை என்று உறுதி கூறுகிறான்.

**பங்கேற்று நடித்தல் : இதன் பாத்தரங்கள்**

**முதல் மாணவன்:** தன் தோழியிடம், தனது அன்பை வெளிப்படுத்துவதற்காக, அவளின் புகைப்படங்களை முகநூலிலிருந்து பதிவிறக்கம் செய்து, கூட்டுப்புகைப்படம் ஒன்றைத் தயாரித்து அளிக்கிறான். மக்களைப்பற்றி அறிந்துகொள்ள சமூக ஊடகங்கள் சிறந்தவை என்று அவன் கருதுகிறான்.அவளின் அனுமதியின்றி, அவளின் புகைப்படங்களைப் பதிவிறக்கம் செய்து, அவளின் சொந்தத் தகவல்களைச் சேகரிக்கிறான். அவளின் நண்பர்கள் குழுவிலும் அவன் இல்லை.

**இரண்டாம் மாணவன்:** முதல் மாணவனின் நண்பன். நல்ல தகவல்களைப் பெற்றுப் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு தனது அறிவைப் பெருக்கிக்கொள்கிறான். தனது நண்பன் அத்தவறை மீண்டும் செய்யாமல் இருக்க முயற்சி செய்கிறான்.

**மூன்றாம் மாணவன்:** முதல் மாணவனின் விருப்பப்படி எப்போதும் இவன் நடக்கிறான். அவனுக்கு உறுதிபடக்கூறும் திறன்கள் இல்லை.

**பிறந்தநாள் கொண்டாடும் மாணவி:** 9ஆம் வகுப்பில் வேறொரு (நல்ல நண்பனாக) பிரிவில் படிக்கும் மாணவி. நல்ல அறிவுள்ள நிறைய தகவல்கள் பெற்றுள்ளவள். இவரும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறாள். உறுதிபட உரையாடுவதில் திறன்படைத்தவள்.

**ஆசிரியர்:** இவர் இணையக் குற்றம், அதன்சட்டப்பிரச்சனைகள், POCSO சட்டம் ஆகியவற்றை விளக்குகிறார்.

**சூழ்நிலை 4.2**

நான்கு நண்பர்கள் ஒன்பதாம் வகுப்பில் படிக்கிறார்கள். இருவர் பல்வேறு ஊடகங்களில் வந்த பொய்யான விளம்பரத்தைக் காண்கின்றனர். இரண்டு நண்பர்கள் 30 நாள்களில் 20 கி.கி உடல் எடையை குறைக்கும் மாத்திரை பற்றி ஒரு இணையத்தளத்தில் காண்கின்றனர்.அவர்களின் தோற்றம் பற்றிய பிரச்சனைக்கு தீர்வுகாண்பதற்காக, இருவரும் அந்த மாத்திரையை வாங்குகின்றனர். மூன்றாம் நண்பர் 6 மாதங்களில் 6 இன்ச் உயரமாக வளர்வதற்கான ஊட்டச்சத்து பானம் பற்றிய தொலைக்காட்சி விளம்பரத்தையும், அதன் 100% விளைவின் உறுதி பற்றித் தெரிவிக்கப்பட்டதையும் காண்கிறார். இது பற்றிச் சந்தேகம் கொண்டு, பின்னர் வாங்கலாம் என்று நினைக்கின்றனர்.நான்காம் நண்பர் தனது வாட்ஸ்அப் செய்தியில், 30 நாள்களில் ஆணழகனாக மாறலாம் என்ற தகவலைப் பெறுகிறான்.ஆனால், கூர்ந்து ஆய்வு செய்து, இந்த மாற்றம் இவ்வளவு குறுகிய நாட்களில் ஏற்பட வாய்ப்பில்லை என்பதால், அதனைக் கண்டுகொள்ளவில்லை.மறுநாள் அனைத்து நண்பர்களும் தகவல்களின் விளம்பரம் தொடர்பான அனுபவத்தைப் பற்றி மற்றொரு நண்பனிடம் தெரிவிக்கின்றனர். அவள் அதுபோன்ற விளம்பரத்தைப் பார்த்து ஏமாந்து, அந்தப் பொருளை வாங்கிப் பயன்படுத்தியதன் பக்க விளைவாக முகத்தில் கரும்புள்ளியும், பருக்களும் ஏற்பட்டுள்ளதைக் காண்பிக்கிறான். மற்ற நான்கு நண்பர்களும் அவர்களின் சூழ்நிலையைப் புரிந்துகொள்கின்றனர்.இரண்டு நண்பர்கள் அந்த மாத்திரைகளைத் தூக்கி எறிந்துவிட வேண்டும் என்று முடிவெடுக்கின்றனர். மூன்றாம் நண்பர் அப்பொருளை வாங்க வேண்டாம் என்று முடிவெடுக்கிறான்.நான்காம் நண்பர், தனது அறிவையும் சிந்தனையையும் பயன்படுத்தி அந்தப் பொய்யான விளம்பரத்திற்குப் பலியாகாமல் பாதுகாப்பாக இருந்ததைப் பகிர்ந்து கொள்கின்றான்.அனைவரும், தங்களைக் காப்பாற்றியதற்காக, அவளுக்கு நன்றி தெரிவிக்கின்றனர்.

**பங்கேற்று நடித்தல் : இதன் பாத்திரங்கள்**

**முதல் இரண்டு நண்பர்கள்:** இவர்கள் உடல் எடை அதிகமாக இருப்பதால் குறைவான தன்னம்பிக்கையுடனும், தங்களின் குடும்பத்தினர் உடல் எடையைக் குறைக்கக் கூறி அழுத்தம் தருவதாலும், உடல் எடையைக் குறைத்து பிரச்சனைக்குத் தீர்வு காண வேண்டும் என்று நினைக்கின்றனர்.

**மூன்றாம் நண்பர்:** தனது உடல் தோற்றம் பற்றி அதிக அக்கறை கொண்டு, அதற்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டும் என்று விரும்புகிறான். வகுப்பு மாணவர்கள் பிற நண்பர்கள் முன்னர், இவ்வாறு உயரம் குறித்துக் கேலி செய்கின்றனர்.உயரம் அதிகமானவர்களைவிட, தான் உயரம் குறைவாக இருப்பதால் தாழ்வு மனப்பான்மையோடு இருக்கிறான்.

**நான்காம் நண்பன்:** தனது அறிவையும் சிந்தனையையும் பயன்படுத்தி, பொய்யான விளம்பரத்தற்கு இரையாகாமல் இருக்கிறான்.

**ஐந்தாம் நண்பன்:** இவள் அவர்களுடன் படிக்கும் மாணவி. அவள் எவ்வாறு பொய்யான விளம்பரத்தால் ஈர்க்கப்பட்டாள் என்பதைப் பகிர்ந்து கொள்கிறாள்.

**தலைப்பு 5 : போதைப் பழக்கத்தின் காரணமும் தடுப்பும்**

**சூழ்நிலை : 5.1**

விஜய் புகைப்பிடிக்கிறான். அவன் புகைப்பிடிக்கும் பழக்கத்தை தனது நண்பர்களிடமிருந்து பெற்றுள்ளான். அவர்கள், இவனிடம் புகைப்பிடித்தால் மன அழுத்தத்திலிருந்து விடுபடலாம் என்று கூறியதால், இவன் இப்பழக்கத்தை ஆரம்பித்தான். அவன் தனது நண்பர்களும் புகைபிடிக்க வேண்டும் என்று உறுதியாக நினைக்கிறான். அவன் அப்துல்லா மற்றும் மஞ்சுவிடம், "நண்பர்களே, என்னிடம் சிகரெட்டுகள் உள்ளன. வாருங்கள், நாம் அனைவரும் புகைபிடிப்போம்" என்று கூறுகிறாளன். அப்துல்லா புகைப்பிடிப்பது தவறில்லை என்று கருதுகிறான். மேலும், அவன் புகைப்பிடித்துப் பார்க்க வேண்டும் என்று ஆவலாக இருந்தான். அவன், " ஆஹா! நன்றி, மிகவும் நல்லது" என்ற கூறினான். "பெரியவர்கள் புகைப்பிடிப்பதைப் பார்த்து நான் ஆச்சரியப்பட்டு, நானும் புகைப்பிடிக்க முயற்சி செய்யலாம் என்று விரும்புகிறேன். ஆனால், எனக்கு வாய்ப்பே கிடைக்கவில்லை" என்று அவன் கூறினான். தானும் புகைப்பிடிக்காவிடில் , மற்றவர்கள் கேலி செய்வார்கள் என்று அவன் நினைத்து, புகைப்பிடிக்கிறான். மேலும், அவன் பிறருக்கும் சிகரெட் பெட்டியை அளிக்கிறான். புகைப்பிடித்தல் உடல் நலத்திற்கு தீங்கானது என்பது மஞ்சுவிற்குத் தெரியும். ஆனால், தான் தனது நண்பர் குழுவில் ஒற்றுமை இல்லாமல் இருப்பதாக மற்றவர்கள் கருதக்கூடாது என்று நினைக்கிறாள். எனவே, அவளும் சரியென்று கூறுகிறாள். அவள், "நானும் புகைப்பிடிக்க நினைக்கிறேன். இல்லையெனில், நான் தமது குழுவில் இருப்பதற்கான துணிச்சல் இல்லாதவள் என்று நீங்கள் நினைக்கக்கூடும்" என்று கூறி, ஒரு சிகரெட்டை எடுத்து புகைக்கிறாள். ராஜு, புகைப்பிடித்தலை அறவே வெறுப்பவன். அவன், "புகைப்பிடித்தற்கு வாய்ப்பே இல்லை. புகைப்பிடிப்பதன் மூலம் தான், நான் வளர்ச்சியடைந்தவன் என்றோ துணிச்சலானவன் என்றோ நிரூபிக்க வேண்டியதில்லை. புகைப்பிடித்தல் எனது உடலுக்கும் பிறருக்கும் கெடுதல் என்று எனக்குத் தெரியும். எனது உடல் நலத்தைக் கெடுத்துக் கொண்டு நான் வளர்ந்து விட்டேன் என்பதை நிரூபிக்க வேண்டும் என்று நான் விரும்பவில்லை, என்று கூறுகிறான். ஒரு சிகரெட்டை புகைப்பதால், உடலுக்கு பெரிய தீங்கு ஒன்றும் ஏற்படாது என்று அசோக் கருதினாலும், அவனும் புகைப்பிடிப்பதை விரும்பவில்லை. இச்செயல் தன்னை அப்பழக்கத்திற்கு அடிமையாக்கி விடும் என்று அசோக் நினைக்கிறான். எனவே, விஜய் வழங்கிய சிகரெட்டைத் தொடாமல் 'வேண்டாம்' என்று உறுதியாக மறுத்துக் கூறுகிறான்.

**பங்கேற்று நடித்தல் பாத்திரங்கள்**

விஜய் : தொடர்ந்து புகைப்பிடிப்பவன். தனது நண்பர்களையும் புகைப்பிடிக்குமாறு வற்புறுத்துகிறான்.

அப்துல்லா : புகைப்பிடிக்கும் போது அருகில் இருந்து சிகரெட் புகையை கவனிக்கிறான். தனது நண்பர்களுடன் ஒன்றாக புகைப்பிடிக்க விரும்புகிறான்.

மஞ்சு : புகைப்பிடித்தல் உடல்நலத்திற்கு தீங்கானது என்பதைத் தெரிந்திருந்தும், தனது நண்பர் குழுவில் ஒற்றுமை இல்லாமல் இருப்பதாக மற்றவர்கள் கருதக்கூடாது என்று நினைத்து புகைப்பிடிக்கிறாள்.

ராஜு : புகைப்பிடிப்பதை முழுமையாக எதிர்ப்பவன். புகைப்பிடித்து மட்டுமே, தான் முடிவெடுக்கும் திறனைக் கொண்டவன் என்று நிரூபிக்க வேண்டியதில்லை என்று நினைக்கிறான்.

அசோக் : ஒரு சிகரெட்டைப் புகைப்பதால், உடல் நலத்திற்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என்று நம்புகிறான். ஆயினும், ஒருமுறை பிடித்தால், அப்பழக்கத்திற்கு

அடிமையாகி விடுவோம் என்று நம்புவதால், இவன் புகைப்பிடிக்க விரும்பவில்லை .

**சூழ்நிலை 5.2**

ஒருநாள் ஒன்பதாம் வகுப்பு படிக்கும் ஒரு மாணவன் சளி மற்றும் இருமல் நோயால் அவதிப்பட்ட போது, இருமல் மருந்தினை உட்கொள்ளும்படி மருத்துவர் அறிவுறுத்தினார். இவன் உடல்நிலை சரியில்லாத போது, அவனை சந்திக்க மூன்று நண்பர்கள் அவனது விடுதி அறைக்கு அடிக்கடி வந்தனர். அந்த நண்பர்களில் ஒருவனுக்கு அந்த இருமல் மருந்தினை சுவைத்துப் பார்த்து, அச்சுவை பிடித்ததினால், தொடர்ந்து அதனை உட்கொள்ள வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. அதனால் அவனே மருந்துக் கடைக்காரரிடம் நேரடியாகச் சென்று மருந்தினைப் பெற்று, அப்பழக்கத்திற்கு அடிமையாகிறான். மற்ற நண்பர்கள் அவனது அறைக்கு வந்துப் பார்த்தபோது, பல இருமல் மருந்து பாட்டில்கள் அறையில் கிடந்ததைக் கண்டு வருத்தமடைகின்றனர். அவர்கள் அனைவரும் அவனை ஆலோகரிடம் அழைத்து செல்ல வேண்டுமென்று முடிவெடுத்தனர்.

**பாத்திரங்கள்:**

1. **முதல் நண்பன்:** இவன் ஒன்பதாம் வகுப்பு படிக்கும் மாணவன். இவன் சளி மற்றும் இருமல் நோயினால் அவதிப்பட்ட போது, மருத்துவரின் ஆலோசனைப்படி, இருமல் மருந்தினை உட்கொள்கிறான். அவனின் மூன்று நண்பர்கள், அவன் நோயால் அவதிப்பட்ட போது அவனைக்காண அவனது அறைக்கு வருகின்றனர்.

2. **இரண்டாவது நண்பன்:** இருமல் மருந்தினை சுவைத்து, அச்சுவை பிடித்ததினால், மருந்துக் கடைக்காரரிடம் நேரடியாகச் சென்று இருமல் மருந்து பாட்டில்களைப் பெற்று, அதனை தொடர்ந்து உட்கொள்கிறான். அதனால் அதற்கு அடிமையாகிறான்.

3.4. **மூன்றாம் மற்றும் நான்காம் நண்பர்கள்:** இரண்டாவது நண்பனைக் காண, அவனது அறைக்குச் சென்று, பல மருந்து பாட்டில்கள், அறையில் கிடந்ததைக் கண்டு வருத்தமடைகின்றனர். அவனை ஆலோசகரிடம் அழைத்துச் செல்ல வேண்டுமென்று முடிவெடுத்தனர்.

5. **ஆலோசகர்:** இவர் போதைக்கு அடிமையாதலின் விளைவுகளை எடுத்துக் கூறி, அவனை அந்த பழக்கத்திலிருந்து விடுபட உதவி செய்தார்.

இயக்குநர்

28/10/2024